[9th August 1963

கனம் திரு. வெ. ராமையா : இதை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து சமீபத்தில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. மறுபடியும் பரிசீலனை செய்யும் உத்தேசம் இல்லை.

திரு. சா. ராமசாமி : கிஸ்தி காலங்களிலே கிராமாதிகாரிகளோ அல்லது கீழ்த்தர சிப்பந்திகளோ மாதத்திற்கு மூன்று முறை இருசால் செலுத்த செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காவது அவர்களுக்குப் பயணப்படி கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அவர்கள் தாலூகா நாரியாலயங்களுக்குப் போகவேண்டுமென்ற நிலைமை ஏற்படுவதை அரசாங்கம் உணர்ந்த காரணத்தினல்தான் இப்பொழுது பிக்ஸட் டி.ஏ. கொடுக்கப்பட்டு வருகிறது.

Cauvery waters for Madras

* 74 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether any decision has been taken regarding the report of the investigation by the special engineering staff on the scheme for bringing water from the Cauvery to the City of Madras; and whether a copy of the report will be placed in the Legislature Library?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இத்திட்டத்தின் மீது இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. இந்த அறிக்கையின் நகலைச் சட்டப் பேரவை நூலகத்தில் வைப்பதுபற்றி நாளடைவில் யோசிக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : காவிரியிலிருந்து குடி தண்ணீரை ஒரு வருஷத்திலே கொண்டு வருவதாகக் கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லி 4 வருடங்கள் ஆயிற்று. அறிக்கைகள், பரிசீலனை நிபுணர் குழு, என்ற அவதாரங்களைத் தாண்டி உண்மையாகவே வருவதற்கு உத்தேசமாக எவ்வளவு காலம் பிடிக்கும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : இப்பொழுது காவேரி அணையிலேயே சரியான முறையில் தண்ணீர் இல்லாமல் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தினலும், மேலும், காவேரிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வேறு அணை இல்லாத காரணத்தினலும், சென்னை நகரத்திற்கு வேறு வழியிலே திட்டவட்டமாக தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது இது 'இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜில்' இருப்பதன் காரணமாக நான் எதுவும் கூறுவதற்கு விரும்பவில்லை.

9th August 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : அடுத்த பொங்கலுக்காவது காவேரி நீர் சென்னைக்குக் கிடைக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் பொங்கலுக்குள்ளாக அப்படி விசேஷமாக என்ன செய்யப் போகிறார் என்று சொன்னால், அதற்குள் அரசாங்கம் சென்னைக்கு எப்படியாவது தண்ணீர் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கும்.

Master-Plan for Madras City

* 75 *Q*.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the **Minister** for Public Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned a scheme for the investigation and preparation of a master-plan for the Madras city; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம்.

(இ) சென்னைமாநகர் நகரப் பகுதிக்கு மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில், சென்னை மாநகர்ப் பகுதிக்குத் தோராயமான அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து, முடிவில் விரிவாக மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கு ஆரம்ப நிலையில் தேவைப்படும் பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்காக பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1967-ம் ஆண்டு இறுதிக்குள் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

*80-அ கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யேல் பல்கலைக் கழக நகர அபிவிருத்தி பேராசிரியர்களான வால்டர் ஹாரிஸ், நிப்ஸன் ட்யூன்ஸ் ஆகியோரிடமிருந்து சென்னை மாநகரம் பற்றி ஏதாவது ஒரு மாஸ்டர் பிளான் அரசிடம் ஒப்படைக்கப்பட்டதா?

(இ) அந்த அறிக்கையின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) The report furnished by the team of American Experts headed by Mr. Waltern Harris does not contain any master-plan as such for the Madras City, but it envisages the establishment of an Institute of Planning for Post-Graduate education in Town and Country Planning. The preparation of the master-plan for the Madras City will be undertaken by that institute on its formation.